Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
SESSIONS CASE NO.23**/2021**

Deposition of PW4 Witness for Defence

Defence Court

Name :Pradeep Raj Caste:

Father's Name :Anandan Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 19th April 2022.

**முதல் விசாரணை-**

நான் கதவு எண்.294, 4வது குறுக்கு தெரு, அன்பு நகர், திருவேற்காடு, சென்னை என்ற முகவரியில் வசிக்கிறேன். நான் தற்போது திருவேற்காடு காவல் நிலைய குற்ற எண்.1358/2021 என்ற வழக்கில் விசாரணை கைதியாக சிறையில் இருக்கிறேன். இறந்து போன அஜித்குமார் எனக்கு சிறு வயதிலிருந்தே பழக்கம். சதாம்உசேன் என்பவரும் எங்களுடைய நண்பராவார். லால் என்கிற பிரகாஷ் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளில் செந்தில் குமார் என்பவரை மட்டும் தான் எனக்கு ெ தரியும். சம்பவம் சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வேண்டுகோளின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் அஜித்குமார் மற்றும் சதாம்உசேனும் நண்பர்கள் என்றும் நாங்கள் வசிக்கும் பகுதியிலேயே லால் என்கிற பிரகாஷ் கஞ்சா விற்கும் வியாபாரம் செய்கிறார் என்றும் அவரிடம் கஞ்சா வாங்கும் விததத்தில் அவர் பழக்கம் என்றும் அந்த வகையிலேயே லாலின் நண்பர்கள் ஆகாஷ் என்கிற கட்டப்பா, காத்தவராயன், குல்லு என்கிற குணசேகர பாண்டியன் மற்றும் செந்தில் குமார் என்கிற செந்தில் பழக்கம் என்றும் கஞ்சா விற்பனை சம்பந்தமாக அஜித்குமாருக்கும் லால் என்கிற பிரகாஷுக்கும் முன்விரோதம் இருந்தது என்றும் இருவரும் மாறி ம ாறி கொலை செய்ய

திட்டம் தீட்டியதாகவும் நான் அதெல்லாம் வேண்டாம் என்று சொல்லியதாகவும் 12/09/2020 காலை 08.00 மணியளவில் நான் காலை கடன் கழிக்க ஸ்ரீ அபிராமி நகர் அருகே காலி மைதானத்திற்கு சென்ற போது அங்கே லால் என்கிற பிரகாஷ் அவரின் நண்பர்கள் ஆகாஷ் என்கிற கட்டப்பா, காத்தவராயன், குல்லு என்கிற குணசேகர பாண்டியன் மற்றும் செந்தில் குமார் என்கிற செந்தில் ஒன்றாக தண்ணீ அடித்துக் கொண்டிருந்ததாகவும் சமார் 08.30 மணியளவில் அஜித்குமாரும் சதாம்உசேனும் அந்த இடத்திற்கு வந்ததாகவும் அஜித்குமார் லாலிடம் கஞ்சா வாங்கி சதாம்உசேனிடம் கொடுத்ததாகவும், பின்னர் லால் அஜித் குமாருக்கு கஞ்சாவை பாங்கில் போட்டு கொளுத்திவிட்டதாகவும், குனிந்து கஞ்சா அடிக்கும் போது கட்டப்பாவிடம் இருந்து கத்தியை வாங்கி லால் என்கிற பிரகாஷ் அஜித்குமாரின் தலையில் வெட்டியதாகவும் அதை பார்த்து சதாம்உசேன் வேண்டாம் என்று கத்தியதாகவும் அதை கேட்காமல் லால் கத்தியால் அஜித் குமார் தலையில் மாறி மாறி வெட்டியதாகவும், கட்டப்பாவும் குல்லுவும் அஜித்குமாரின் இரண்டு கால்களை பிடித்துக்கொண்டதாகவும், காத்தவராயனும் செந்திலும் அஜித்குமாரின் இரண்டு கைகளை பிடித்துக்கொண்டதாகவும் லால் கத்தியால் அஜித்குமாரின் தலை மற்றும் முகத்தில் சரமாறியாக வெட்டியதாகவும் அதனால் அஜித் குமார் இரத்த வெள்ளத்தில் விழுந்து விட்டதாகவும் அதை பார்த்த நானும் சதாம்உசேனும் பயந்து ஆட்டோவில் தப்பிவிட்டதாகவும் வழியில் அஜித்குமார் வீட்டிற்கு சென்று அவரின் மனைவி கீர்த்திகாவிற்கு தகவல் சொல்லி அவரையும் அஜித்குமாரின் அம்மா மற்றும் அண்ணனை சம்பவ இடத்திற்கு அழைத்துவந்ததாகவும் சம்பவ இடத்தில் அஜித் குமார் வெட்டு காயத்தில் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்ததை பார்த்துவிட்டு கீர்த்திகா இது சம்பந்தமாக திருவேற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஒரே பகுதியை சேர்ந்தவர்கள் என்பதாலும் நண்பர்கள் என்பதாலும் இந்த குற்ற வழக்கில் இருந்து எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.